# முதுகலைப் பட்டம் பெற்ற 52 மாணவர்கள்

சிங்கப்பூர் கலைப் பல்கலைக்கழகமும் அதனை நிறுவிய லசால் கலைக்கல்லூரியும் இணைந்து முதல் முதுகலைப் பட்டமளிப்பு விழாவை நவம்பர் 7ஆம் தேதி நடத்தின. 52 மாணவர்கள் இவ்வாண்டு பட்டம் பெற்றனர்.



சிங்கப்பூர் கலைப் பல்கலைக்கழகமும் லசால் கலைக் கல்லூரியும் வழங்கிய வடிவமைப்பு முதுகலைப் பட்டத்தைப் பெற்ற சுக்ரித்தி சிங், சுவேதா ராஜா சக பட்டதாரிகளுடன்.
**படம்: சிங்கப்பூர் கலைப் பல்கலைக்கழகம்**

**ரவி சிங்காரம்**

வாழ்வில் அனைவரும் மகிழ்ச்சியைத் தேடிச் செல்கின்றனர். அந்தத் தேடலுக்கு வடிவமைப்பின் மூலம் எவ்வாறு ஓர் உருவம் கொடுக்கலாம் எனச் சிந்தித்துப் பார்த்தார் சுவேதா ராஜா, 28.

அதனால் அவர் உருவாக்கியதே 'தி பர்சூட் ஆஃப் ஹேப்பினஸ்' எனும் திட்டம்.

"ஆராய்ச்சிகளின்படி, நாம் அன்றாடம் நமது பாதகமான எண்ணங்களை எழுதிக் கிழித்தெறிந்தால் நமக்கு மனநிம்மதி கிடைக்கும். அதற்காக ஒரு கருவியை உருவாக்கினேன்.

"ஆயுர்வேதத் தாவரங்களான அஷ்வகந்தா, வெட்டிவேர் - போன்றவற்றைக் கொண்டு மன உளைச்சலைக் குறைக்கும் வாசனைத் திரவியத்தை உருவாக்கினேன். மகிழ்ச்சி மெழுகுவத்திகளையும் மகிழ்ச்சிக்காக உட்கொள்ளும் மருந்து ஒன்றையும் தயாரித்துள்ளேன்.

"மகிழ்ச்சி தரும் ஒன்று, பிறருடன் புதிய அறிமுகம் ஏற்படுவது. அதனால், 'தொடர்புகளை ஏற்படுத்துதல்' (Building Connections) எனும் தொழில்நுட்பத் தீர்வையும் உருவாக்கியுள்ளேன். இருவர் இருந்தால்தான் இந்தத் தீர்வு வேலைசெய்யும். இருவரும் பேசிக்கொள்வதால் தம்மைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள அது வழிவகுக்கும்," என்றார் சுவேதா.

தான் உருவாக்கிய பொருள்களை 'ஹேப்பியோலோஜி' (Happiology) எனும் பெயரில் அவர் விளம்பரப்படுத்துகிறார். "வெறும் பொருள்களை மட்டுமல்ல; ஓர் ஒட்டுமொத்த அனுபவத்தையும் வழங்க விரும்புகிறேன்," என்றார் சுவேதா.

சென்னையில் பிறந்து வளர்ந்த சுவேதா, இத்திட்டத்தை முதலில் சென்னையில் சோதித்துப் பார்த்து, பிறகு சிங்கப்பூருக்குக் கொண்டுவர முயற்சி செய்யவுள்ளார்.

"நான் சிங்கப்பூர் வந்ததிலிருந்து வடிவமைப்பு, இங்குள்ள அனைவரது வாழ்விலும் உள்ளது என உணர்ந்தேன். ஆனால் இந்தியாவில், குறிப்பாகச் சென்னையில், இன்னும் அந்த அளவுக்கு இல்லை. என் வயதில் இருக்கும் இளையர்கள் இப்போது மனநலத்தை நோக்கி முதல் அடியை எடுத்துவைக்கின்றனர். அதனால் எவ்வாறு அவர்களுக்கு உதவமுடியும் எனச் சிந்தித்தேன்," என்றார் சுவேதா.

"சென்னையில் உள்ள ஒரு ஹோட்டலில் நான் மக்களுடன் ஒரு சோதனையை நடத்தினேன். அவர்கள் வேலை முடிந்த களைப்பில் வந்திருந்தனர். முழு அனுபவத்தைப் பெற்றதும் அவர்கள் சற்று நிம்மதியடைந்தனர்.

"சிங்கப்பூரிலும் நான் என் சக மாணவர்களிடம் இத்திட்டத்தைச் சோதித்துப் பார்த்தேன். சிங்கப்பூரில் வேகமான வாழ்க்கைச் சூழல் காரணமாக விரைவுத் தீர்வான 'மகிழ்ச்சி மருந்தை' பெரும்பாலோர் விரும்பினர்," என்று தெரிவித்தார் சுவேதா.

'காஸ்மோ ஸ்டுடியோ' எனும் நிறுவனத்தையும் (https://cosmostudio.in/) சுவேதா சென்னையில் சென்ற ஆண்டு முதல் நடத்திவருகிறார்.

வெவ்வேறு பொருள்களுக்கான பொதியாக்கம் (packaging) - எடுத்துக்காட்டாக, மிட்டாய்த் தாள் வடிவமைப்பு, புதிய நிறுவனங்களைச் சந்தைப்படுத்துதல், சமூக ஊடகத்தில் விளம்பரப்படுத்துதல், இணையத்தள வடிவமைப்பு போன்றவற்றை அந் நிறுவனம் செய்கிறது.

"மகிழ்ச்சியைத் தரும் கட்டமைப்பை எவ்வாறு என் வடிவமைப்பில் புகுத்தி என் வாடிக்கையாளர்களை மகிழ்விக்கலாம் என சிந்திப்பேன்," என்றார் சுவேதா.

சுவேதா ஏழு ஆண்டுகளுக்கு முன்பே லசால் கலைக் கல்லூரிக்கு விண்ணப்பிக்க முயன்றார். ஆனால், அப்போது அவரது வேலை அனுபவம் போதவில்லை. அதன்பிறகு வேலையுலகில் மூழ்கிவிட்டேன். இப்போதுதான் முதுகலைப் பட்டம் பெற நேரம் கிடைத்தது என்றார் சுவேதா.


மிதவையாக மாறக்கூடிய நாற்காலி.


மிதவையாக மாறியுள்ள நாற்காலி. **படங்கள்: சுக்ரித்தி சிங்.**

## வெள்ளம் வருமுன் அணைபோட வேண்டும்

வெள்ளத்தில் மாட்டிக்கொண்டவர்களுக்கு, தம் குழந்தைகள் அல்லது பொருள்களைப் பாதுகாப்பான இடத்துக்கு எடுத்துச் செல்ல உதவும் நாற்காலியை வடிவமைத்துள்ளார் வடிவமைப்பில் முதுகலைப் பட்டம் பெற்ற சுக்ரித்தி சிங்.

இந்த நாற்காலியை நீரில் செல்லும் மிதவையாக மாற்றலாம். இதுபோன்ற பல நாற்காலிகளை இணைத்து இன்னும் பெரிய மிதவையாக மாற்றலாம். மறுசுழற்சி செய்யப்பட்ட நெகிழி, துணி உள்ளிட்ட பொருள்களுடன் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

"வெள்ளம் ஏற்படும் சமயங்களில், பிள்ளைகளைக் காப்பாற்றும்போது உடைமைகளை விட்டுவிட வேண்டியுள்ளது. இரண்டையும் ஒரே சமயம் காப்பாற்ற இது வழிவகுக்கிறது.

"என் தென்னிந்திய நண்பர்கள் அடிக்கடி ஏற்படும் வெள்ளத்தைப் பற்றி வருத்தப்பட்டனர். அதைக் கேட்டபோது, ஒரு வடிவமைப்பாளராக நம்மாலும் ஏதேனும் செய்ய இயலும் எனத் தோன்றியது," என்றார் சுக்ரித்தி.

"ஏற்கெனவே நீச்சல்குள மிதவை போன்ற ஒன்றை எடுத்து, அதனை பாரத்தைச் சுமக்கும் வகையில் மாற்றலாம் என எண்ணினேன். சோஃபா போன்றவற்றை எளிதில் நகர்த்த முடியாது; நாற்காலியை எளிதில் நகர்த்தலாம்," என்றார் அவர்.

இந்தியாவில் பிறந்து வளர்ந்தவர் சுக்ரித்தி. அவர், சிங்கப்பூரைத் தன் மேற்படிப்புக்காகத் தேர்ந்தெடுத்ததற்கு முக்கியக் காரணங்களில் ஒன்று, சிங்கப்பூர் பெண்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பே என்றார் அவர்.

தற்போது முதுகலைப் பட்டம் பெற்று மீண்டும் இந்தியாவிற்கே சென்று பணியாற்ற உள்ளார். இந்தியாவில் வெள்ளம் ஏற்படும் தருணத்தில், நாற்காலி மிதவையைச் சோதித்துப் பார்க்க உள்ளதாகவும் அவர் கூறினார்.

"இந்தக் கலைப்பயணம் என்னை மாற்றி, பெரும் வளர்ச்சியை அளித்துள்ளது," என்ற சுக்ரித்தி, தொடர்ந்து கலை மூலம் சமூக மாற்றங்களை ஏற்படுத்த விழைகிறார்.



ஆயுர்வேதத் தாவரங்களான அஷ்வகந்தா, வெட்டிவேர் - போன்றவற்றைக் கொண்டு மன உளைச்சலைக் குறைக்கும் வாசனைத் திரவியத்தை 'ஹேப்பியோலோஜி' எனும் பெயரில் சுவேதா உருவாக்கியுள்ளார். மகிழ்ச்சி மெழுகுவத்திகளையும் மகிழ்ச்சிக்காக உட்கொள்ளும் மருந்து ஒன்றையும் தயாரித்துள்ளார்.




**வலது படம்:** பாதகமான எண்ணங்களை எழுதிக் கிழித்தெறிந்தால் நமக்கு மனநிம்மதி கிடைக்கும் என்பதற்கேற்ப, துண்டுச்சீட்டுகளைக் கிழித்தெறியும் கருவியை உருவாக்கினார் சுவேதா.
**படங்கள்: சுவேதா ராஜா**